**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 47/2023**

**நாள்: 16.06.2026**

**அரசு தரப்பு சாட்சி** : 24 (LW26)

2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 16ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் BSA சட்டத்தின் படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகநாதன் | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( A2 to A4 ஆஜர். A1 இறப்பு )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் கடந்த 30.06.2024ம் தேதியன்று கோவிலாங்குளம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணிஓய்வு பெற், தற்போது பரமக்குடியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 2012ம் ஆண்டு எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்த போது, கடந்த 03.10.2012ம் தேதி எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் காலை 08.00 மணிக்கு ஆஜர் அணிவகுப்பிற்காக நிலையம் சென்றேன். நிலையத்தில் குற்றப்பிரிவு காவலர்கள் கைதி அறைக்குள் ஒரு கைதியை வைத்திருந்தார்கள். ஆஜர் எதிரிகள் அந்த குற்றப்பிரிவு காவலர்களுக்குள் இருந்தார்கள். நான் பாரா காவலரிடம் காவல் நிலைய பொறுப்பு அதிகாரிக்கு தகவல் தெரியுமா என்று



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.06.16 15:38:07 +0530

கேட்டேன். அதற்கு அவர் SI யிடம் தகவல் தெரிவிக்கவில்லை என்று என்னிடம் சொன்னார். நான் இந்த வழக்கு எமனேஸ்வரம் காவல் நிலையமா அல்லது பரமக்குடி நகர் காவல் நிலையமா என்று கேட்டேன். அதற்கு சுரேஷ் பரமக்குடி நகர் காவல்நிலையம் என்று சொன்னார். நான் இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் ஆறுமுக நைனார் என்பவரிடம் குற்றப்பிரிவு காவலர்கள் எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் ஒரு கைதியை வைத்திருப்பதாக தகவல் சொன்னேன். பின்பு காலை 08.10 மணிக்கு கனம் இராமநாதபுரம் அமர்வு நீதிமன்றத்திற்கு நீதிமன்ற அலுவலாக வந்துவிட்டேன். "நீங்கள் நீதிமன்றத்திற்கு செல்லுங்கள், நான் வந்து பார்த்துக்கொள்கிறேன்" என்று சார்பு ஆய்வாளர் என்னிடம் சொன்னார். இது சம்மந்தமாக CBCID ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் காவல் நிலையம் செல்வதற்கு முன்னதாக அன்றைய தினம் யார் காவல் நிலையத்தில் பணியில் இருந்தார் என்றால் சுரேஷ் மட்டும்தான் பணியில் இருந்தார்.

பொதுவாக காலை 08.00 மணிக்கு ரோல்கால் வைப்பார்கள். அப்போது காவல் நிலையத்தில் பணிபுரியும் அனைத்து காவலர்களும் அந்த ரோல்காலில் கலந்து கொள்வார்கள். அன்றைய தினம் யார் ரோல்கால் வைத்தார்கள் என்று எனக்குத் தெரியாது.

அப்போது எமனேஸ்வரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக திரு.ஆறுமுக நயினார் பணியில் இருந்தார் என்றால் சரிதான். குற்றப்பிரிவு காவலர்கள் அழைத்து வந்திருந்த கைதியை, ஏன் எதற்காக அழைத்து வந்துள்ளார்கள் என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. நான் பார்க்கும்போது, அந்த கைதி கைதியறைக்குள் இருந்தார். குற்றப்பிரிவு போலிசார் வெளியில் உட்கார்ந்திருந்தார்கள். நான் பார்த்த போது அந்த கைதி அறைக்குள் இருந்த நபர் பேசிக்கொண்டுதான் இருந்தார். அந்த கைதியை மேலே அழைத்து சென்றார்களா என்று எனக்குத் தெரியாது. எமனேஸ்வரம் காவல் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு அழைத்து சென்ற நபரானவர், சிகிச்சை



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.16 15:38:10 +0530

பலன் இன்றி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன்.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய Sec.154 of Indian Evidence Act ன் படி அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 03.10.2012 ம் தேதி நான் ரோல்கால் வந்த போது, காவலர் முத்துமணி, சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்லமணி, தலைமைக்காவலர் திரு.முகமது செரிப் மற்றும் சுரேஷ் ஆகியோர் ரோல்காலிற்காக வந்திருந்தார்கள் என்றும், இந்த விவரத்தை நான் காவல் ஆய்வாளரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

எமனேஸ்வரம் காவல் நிலைய லாக்கப் முன்னாடி வைத்து ஆஜர் எதிரிகள் மூவரும், தாங்கள் கையில் வைத்திருந்த லத்தி கம்பால், வெங்கடேசனை எங்கே திருடினாய், எங்கே விற்றாய் என்று கேட்டு அவர் தலை, மார்பு, வலது, இடது தோள்பட்டை, விதைப்பை, கை, கால்கள், தொடைகள், முழங்கால் மற்றும் உடலில் பல இடங்களில் மாறி மாறி அடித்து சொல்லு சொல்லு என்று சொல்லி விசாரித்தார்கள் என்றும், அதை நான் நேரடியாக பார்த்தேன் என்றும், CBCID ஆய்வாளர் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

அடிவாங்கும் நபரை பற்றி நான் விசாரித்த போது, அவர் திருட்டு கேஸில் சம்மந்தப்பட்ட மதுரையை சேர்ந்த வெங்கடேசன் என்றும், 03.10.2012 ம் தேதி அதிகாலை பரமக்குடி உட்கோட்ட குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளர் முனியசாமி மற்றும் குற்றப்பிரிவு போலிசான ஞானசேகரன் ஆகியோர் ரோந்து சென்றபோது, மேற்படி வெங்கசேடனை பரமக்குடி நகைக்கடை பஜாரில் டுவிலரில் வந்தபோது க்ரைம் பார்ட்டியினரை பார்த்த போது, மேற்படி வெங்கடேசன் தப்பி ஓடியதாகவும், பின்பு காந்தி சிலை அருகே அவரை பிடிக்க



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.16 15:38:13 +0530

முற்பட்ட போது, மேற்படி முனியசாமியையும், ஞானசேகரனையும் தாக்க முற்பட்டதாகவும், அதனால் மேற்படி நபரை இருவரும் பிடித்து எமனேஸ்வரம் காவல் நிலையத்திற்கு கொண்டுவந்திருப்பதாகவும், க்ரைம் பார்ட்டியினர் என்னிடம் சொன்னதாக நான் CBCID ஆய்வாளர் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

பின்பு 08.45 மணியளவில் குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளர் திரு.முனியசாமி காவல் நிலையத்திற்கு வந்து, மேல்மாடிக்கு சென்றார் என்றும், அவர் வந்த பிறகும் அடித்து விசாரிக்கும் சத்தமும் வெங்கடேசனின் அலறல் சத்தமும் கீழே இருந்த எங்களுக்கு கேட்டது என்றும் அப்போது மேல்மாடியில் சார்பு ஆய்வாளர் முனியசாமி மற்றும் ஆஜர் எதிரிகள் ஆகிய நால்வரை தவிர வேறு எந்த குற்றப்பிரிவு காவலர்களும் இல்லை என CBCID ஆய்வாளர் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

பின்பு காலை சுமார் 09.00 மணியளவில் எமனேஸ்வரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஆறுமுக நயினார் எங்களிடம் விவரம் கேட்டுவிட்டு, மேல்மாடிக்கு சென்று, யார் இவர், இங்கே ஏன் வைத்து அடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சத்தம் போட்டார் என்றும், அதற்கு க்ரைம் SI முனியசாமி, உங்கள் வேலையை பாருங்கள் என்று பதில் சத்தம் போட்டார் என்றும், உடனே சார்பு ஆய்வாளர் ஆறுமுக நயினார் கீழே இறங்கிவந்துவிட்டார் என்றும், மேலே அவர்கள் சத்தம் போட்டது கீழே இருந்த எங்களுக்கும் கேட்டது என்றும் பின் ரோல்கால் வைத்து ஆஜரில் இருந்த காவலர்களுக்கு Duty Register ல் அலுவல் நியமித்து ரோல்கால் முடித்தார் என்றும் CBCID ஆய்வாளர் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>– இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.06.16 15:38:16 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .